**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .133/2018** | | |
| **PW/DW/CW** | : | **PW6** | | |
| **Name** | : தங்கபாண்டி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.01.2024

---

**முதல் விசாரணை**:

நான் பெரிய செம்மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். ஆட் டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 21.08.2016 ம் தேதி நானும் அ.சா 5 மூர்த்தியும் அதிகாலை 2.30 மணிக்கு உசிலம்பட்டி எஸ்ஓஆர் ஹோண்டா ஆபீஸ் அருகே மதுரைக்கு போய் விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது அங்கு கூட்டமாக இருந்தது விபத்து நடந்ததாக போலீசார் அந்த இடத்தை பார்த்து படம் வரைந்து என்னிடமும் அ.சா 5 மூர்த்தியிடமும் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் உசிலம்பட்டி பழைய தாலுகா ஆபீஸ் ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுகிறேன். அந்த ஆட்டோ ஸ்டாண்டின் அருகில் தான் காவல் நிலையம் உள்ளது. நான் பெரியசெம்மேட்டுப்பட்டிக்கு செல்லவேண்டும் என்றால் காவல் நிலையம் தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையம் வரவழைத்து அங்கு கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. S.d./Vinayagam

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan, DMcum JM No.I, Usilampatti